**MCOP NO: 2410/2024** **DATE: 08.10.2025**

ம.சா :1

பெயர் : திரு. சுதர்சன்

த/பெ : திரு. சிவராஜ்

வயது : 30

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 8 வரை தாக்கல் செய்கிறேன். மசாஆ 3-ஆன ஆவணத்தில் 2-வது தாளாக இணைக்கப்பட்டுள்ள சான்றிதழை பொறுத்து 2-ம் எதிர்மனுதாரரின் வழக்கறிஞரின் வேண்டுதலின் பேரில் ஆட்சேபணை செய்யப்படுகிறது. மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயத்தினால் எனக்கு வருமான இழப்பு ஏற்பட்டதை காட்டுவதற்காக நான் பணிபுரிந்து வரும் நிறுவனத்தில் இருந்து சான்றிதழோ அல்லது எனது வங்கி கணக்கு அறிக்கையோ தாக்கல் செய்யவில்லை. எனக்கு சம்பளமானது வங்கி கணக்கு மூலமாகத்தான் வழங்கப்படும் என்பதால் விபத்தின்போது எனக்கு வழங்கப்பட்ட சம்பளத்தை பொறுத்து வங்கியில் பதிவு இருக்கும். தற்போதும் நான் விபத்திற்கு முன்பு பணி செய்த அதே நிறுவனத்தில் தான் பணி செய்கிறேன். விபத்தின்போது நான் மாத சம்பளமாக ரூ. 35,000/- பெற்று வந்தேன். தற்போது நான் மாத சம்பளமாக ரூ.40,000/- பெற்று வருகிறேன். அதனால் வருமானம் மற்றும் வருமான இழப்பு ஏற்படவில்லை என்றால் சரிதான். எனக்கு காலில் ஏற்பட்ட எலும்பு முறிவிற்கு சிகிச்சை பெற்றதற்கான ஆவணம் எதுவும் நான் ஒப்படைக்கவில்லை. எனக்கு விபத்து நடந்த தேரியானது 17.11.2023 ஆகும். நான் விபத்து ஏற்பட்டவுடன் முதலில் சௌந்தரபாண்டியன் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சென்றேன், அதற்கான ஆவணம் மசாஆ 3-ஆகும். அதில் எனக்கு எலும்பு முறிவு ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மசாஆ 3-ல் 2-வது தாளில் எனக்கு எலும்பு முறிவு ஏற்பட்டதாக கையால் எழுதப்பட்டுள்ளதால் அந்த ஆவணமானது இழப்பீடு அதிகம் பெற வேண்டி ஏற்படுத்திக்கொண்ட ஆவணம்

என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எனக்க எலும்பு முறிவு ஏற்படவிலைல்ல என்றாலும், அவ்வாறு ஏற்பட்டிருந்தால் நுன்கதிர் படம் மற்றும் இதர ஆவணங்களை நான் தாக்கல் செய்திருப்பேன் என்றும், எனக்கு எலும்பு முறிவு ஏற்படவில்லை என்பதால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு விபத்து ஏற்பட்டு 2 நாட்கள் கழித்து தான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என் மிது மோதியதாக நான் சொல்லும்போது JCP வாகனத்தை ஓட்டிய நபருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தினால் முதல் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு தர வேண்டும் என்றும், 2-ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் சொற்ப காயங்கள் என்றும், அதனால் எனக்கு வருமான இழப்பு இல்லை என்றால் சரியல்ல. மசாஆ 4-ஆன ஆவணமான மருத்துவ பில் தொகை ரூ.11,716/-ஐ நானே தயார் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.